# DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

## MCOP. No. 92/2022

Deposition of Witness : RW1(R4 side)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சுந்தர பிரதீபா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | தலைமை ஆசிரியை |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.04.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்). சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

முதல் விசாரணை–

நான் தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டம், அரசு மேல் நிலை பள்ளி, சுந்தர பாண்டிய பட்டினம் அரசு மேல் நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் 4 வது எ.ம.த.சா.ஆ, 1 ஆகும். என்னுடைய மகனுக்கான பிறப்பு சான்றிதழ் 4 வது எ.ம.த.சா.ஆ, 2 ஆகும். நானும் என் மகனும் சேர்ந்து என்னுடன் இருப்பதாக உள்ள குடும்ப அட்டை நகல் 4 வது எ.ம.த.சா.ஆ, 3 ஆகும்.

கடந்த 22.11.2019 அன்று என் கணவர் என்னிடம் இருந்து விவாகரத்து பெற்றுவிட்டார். அது ஒரு இரு தரப்பு வாதிட்ட வழக்காகும். அதற்கான தீர்ப்புரை எ.ம.த.சா.ஆ, 4 ஆகும். மனுதார் வெள்ளத்தாய் என்பவர் என் கணவரின் தாயார் ஆவார். எனக்கு மறு திருமணம் நடக்கவில்லை. ஏன் என்றால் விரும்பவில்லை. என் கணவர் கடந்த 16.04.2021 ஆம் ஆண்டு செங்கல்பட்டு

மாவட்டத்தில் அச்சிரப்பாக்கம் என்ற இடத்தில் மலைபாகத்திலிருந்து உருண்டு வந்த பேருந்து இவர் மீது மோதியதில் இறந்தவிட்டார். என் கணவர் இறப்பு சம்பந்தமாக தொடரப்பட்ட நஷ்ட ஈட்டு வழக்கில் எனக்கும், எங்களுக்கும் பிறந்த எங்கள் மகனுக்கும் உரிய இழப்பீடு தர வேண்டும். என் மகன் பெயர் மிதுன் குமார். தற்போது அவருக்கு வயது 18 வயது பூர்த்தி அடைந்து விட்டது. நான் ஒரு தனி பெற்றோர். தற்போது என்னுடைய வயது 48. பிறந்தது முதல் என் மகனை வளர்த்து இன்று வரை எல்லா செலவுகளையும் பராமரிப்பையும் நான் தான் செய்கிறேன்,. நான் வாடகை வீட்டில் தான் இருக்கிறேன். என் தந்தை கணேசனும் என்னை நம்பி தான் இருக்கிறார்.

தற்போது என் மகன் இளங்களை பொறியாளர் படிக்கிறார். என் மகன் இந்திய குடிமை பணியில் சேர படிக்க போகிறார்.

<u>ம.த.கு.வி.:</u>

கேள்வி : உங்களுடைய மாத வருமானம் எவ்வளவு?

பதில் : ரூ. 1,15,000/-

கேள்வி : உங்கள் மாமியாரை யார் பராமரிக்கிறார்கள்?

பதில் : எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது அவருடைய பையன் வீட்டில் இருக்கிறார், மகள் வீட்டிலும் இருப்பார்.

கேள்வி : உங்கள் மாமியாரை உங்கள் கணவர் தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.04.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S Digitally signed by GOPINATHAN S
Date: 2025.06.27 13:10:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
25.04.2025.